**විදුලි සංදේශ හා තොරතුරු තාක්ෂණ අමාත්‍යාංශය**

**தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சு**

**Ministry of Telecommunication and Information Technology**

# கௌரவ தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரின் செய்தி



2014 ஆம் ஆண்டு நான் தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சராக பதவியேற்ற நான்காவது ஆண்டைக் குறிக்கின்றது. இத் துறையில் முதலாவது அமைச்சராக கால் பதித்ததையிட்டு நான் பெருமை அடைகின்றேன். திறனான பொது மக்கள் சேவை வழங்கப்பட்டது எனவும் அது என் மனதில் எப்பொழுதும் நேசத்திற்குரியதாக ஞாபகத்தில் வைத்திருக்கப்படும் என்பதும் எனது நம்பிக்கையாகும். இச்சந்தர்ப்பத்தில் தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சின் சேவை மற்றும் முன்னேற்றம் மீதான 2014 ஆம் ஆண்டறிக்கைக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் செய்தியொன்றினை வெளியிட கிடைத்தமை எனது பாக்கியமென கருதுகின்றேன்.

தகவல் தொழில்நுட்பத்தில் பாடசாலை சிறுவர்களுக்கு கல்வியறிவூட்டி அதன் மூலம் தகவல் தொழில்நுட்ப கல்வியறிவு வீதத்தை அதிகரிக்கும் நோக்குடன் பாடசாலைகளில் கணனி ஆய்வுகூடங்களை (இ-ஆய்வுகூடங்கள்) ஆரம்பிப்பதற்கான கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆண்டு இறுதியில் 07 மாவட்டங்களில் 563 முழுமையாக உபகரணமளிக்கப்பட்ட ஆய்வுகூடங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. மேலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளடங்கலாக நாடு முழுவதிலும் 1005 நெசனல நிலையங்கள் ஆரம்பித்துவைக்கப்பட்டன. அத்துடன் பொதுமக்கள் சேவை-களை இலகுபடுத்தும் பல்வேறு தகவல் தொழில்நுட்ப முறைகள் இனங்காணப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்.ப கல்வியறிவு வீதத்தை அதிகரிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டதுடன் பில் அன்ட் மிலிண்ட கேட்ஸ் தாபனத்தினால் வழங்கப்பட்ட விருதினையும் பெற்றுக்கொண்டன. காசாக ஐக்கிய அமெரிக்க டொலர் ஒரு மில்லியனும் அதே பெறுமதியான மென்பொருட்களும் விருதாக பெற்றுக் கொள்ளப்பட்டன.

தேசத்திற்கு மகுடம் என்னும் கருப்பொருளின் கீழ் இவ் ஆண்டில் குளியாபிட்டிய நகரை சூழவுள்ள கல்வி நிறுவனங்களில் அபிவிருத்தி செயற்திட்ட நிகழ்ச்சித்திட்டம் இவ் அமைச்சினால் ஒருங்கிணைக்கப்பட்டது. மாணவர் சமுதாயத்திற்கு நன்மையளிப்பதுடன் எதிர்கால சந்ததியினருக்கும் நன்மையளிக்கும் அபிவிருத்தி வேலைகளாக குளியாபிட்டிய வயம்ப பல்கலைக்கழகத்திற்கு 600 மில்லியன் ரூபா செலவில் கேட்போர்கூடம், உடற்பயிற்சி கூடம், நெனோ தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் மற்றும் மாணவர் நிலைய நிர்மாணிப்பு, குளியாபிட்டிய தொழில்நுட்ப கல்லூரிக்காக 60 மில்லியன் ரூபா செலவில் நிர்வாக கட்டிட தொகுதி நிர்மாணிப்பு மற்றும் குளியாபிட்டிய மத்திய கல்லூரிக்காக 157 மில்லியன் ருபா செலவில் கதிரைகளுடன் கேட்போர்கூடம், இருமாடி நூலக நிர்மாணிப்பு என்பன காணப்பட்டன. " தேசத்திற்கு மகுடம்" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அதிக ஆக்கபூர்வமான கல்விசார் செயற்பாடுகள் இவ்வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டதென்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இக்கருமங்களை வெற்றிகரமாக மேற்கொள்ளும் வகையில் குழு உணர்வுடன் செயற்படுவதற்கு தலைமைத்துவத்தினை வழங்கிய அமைச்சின் செயலாளர் அதேபோன்று நிறுவன தலைவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இக்கருமங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற எமக்கு ஊக்குவிப்பையும் சக்தியையும் நல்கிய மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களுக்கும் எனது சக அமைச்சர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

ரஞ்சித் சியம்பலாபிடிய
தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சர்

# செயலாளரின் செய்தி



2014 ஆம் நிதி ஆண்டிற்கான தொலைத்தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சின் வருடாந்த செயலாற்று அறிக்கையை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.
இவ் அறிக்கையில் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த பிசுகால் ஆண்டின் நிதி மற்றும் பௌதிக ரீதியிலான செயற்பாடுகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

பொது மக்களின் தகவல் தொழில் நுட்பத்திறனை மேம்படுத்துதல், இலங்கைத் தகவல் உள்ளடக்கத்தைப் பிரபல்யப்படுத்துதல் மற்றும் நவீன தொழில்நுட்பப் பாவனையிலிருந்து தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றின் அபிவிருத்தி மூலம் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை காலநேரத்திற்கு, மக்கள் ஈடுகொடுக்கக்கூடிய விலையில் ,நாட்டின் எல்லா இடங்களும் உள்ளடங்கும் வகையில் சிறந்த ஒரு சேவையைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் அனைவருக்குமான ஒரு பிரவேசத்தை ஏற்படுத்திக்கொடுத்தல் எமது செயற்பணியாக உள்ளது
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (ICTA), சிறீ லங்கா ரெலிகொம் நிறுவனம்(SLT) மற்றும் தொலைத் தொடர்புகள் திணைக்களம் என்பன இவ் அமைச்சின் கீழ் செயற்பட்ட நிறுவனங்கள் ஆகும்

மேற்கூறிய செயற்பணியை அடைவதற்காக நான்கு விடயங்கள் இனங்காணப்பட்டன.அவையாவன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கல்வி மற்றும் திறனை மேம்படுத்தல், தகவல்தொழில்நுட்ப துறையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளருக்கு உதவுதல் , துணை-தேசிய/ கிராமிய மட்டங்களில் பொருத்தமான தகவல்தொழில்நுட்ப தீர்வுகளின் உபயோகத்தினை அதிகரித்தல் மற்றும் தகவல் தொழில்நுட்ப திறனை அதிகரித்தல் என்பனவாகும்.

மிஸ்ஸக இ நெனபியச; பாடசாலை கணனி ஆய்வுகூடங்களை தாபித்தல் ,நெனசல; கிராமிய தொலை-நிலையங்களை தாபித்தல், மாவட்ட தகவல் தொழில்நுட்ப நிலையங்களை தாபித்தல் மற்றும் இ-அரசாங்க கொள்கையை நடைமுறைப்படுத்தலை நோக்காக கொண்டிருந்த ஏனைய கருத்திட்டங்கள் என்பன அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள் ஆகும்
அமைச்சின் குறிக்கோள்களை அடைவதற்காக ஏனைய அபிவிருத்தி கருத்திட்டங்களை ஒருங்கிணைப்பதுடன் தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட கண்காட்சி/2014 அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டது.
தொலைத்தொடர்பாடல் மற்றும் தகவல்தொழில்நுட்ப துறைக்காக நிறைவேற்றப்பட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்துவது அமைச்சின் இன்னுமொரு முக்கியபொறுப்பாக இருந்தது.

மேற்கூறிய கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் அவ்வருடத்தில் திட்டமிடப்பட்டவாறான எல்லா இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைந்துள்ளன.

2014 நிதி ஆண்டிற்காக இலங்கை அரசாங்கத்தின் திறைசேரியினால் உள்ளூர் நிதியங்களை பயன்படுத்தி நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அமைச்சின் மொத்த வரவுசெலவு திட்டம் ரூபா 1.7பில்லியன். உண்மையான செலவினம் ரூபா 1.1 பில்லியனாக இருந்தது. எல்லா செலவினங்களும் நிதி ஒழுங்குவிதிகள் , தாபனகோவை மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஏனைய அறிவுறுத்தல்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டன.

எமது மூலோபாய திட்ட வழிகாட்டுதலுடன் எதிர்கால வெற்றிக்கான வீதி வரைபடமொன்றை வரைந்துவைத்துள்ளதுடன் அத்தகைய இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நோக்கி எமது முன்னேற்ற மதிப்பீட்டை தொடர்வோம். நாட்டின் தொலைத்தொடர்பாடல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் பற்றி நாம் ஏன் அக்கறை கொண்டுள்ளோம் என்பதனை மனதிற்கொண்டு எமது பங்காளிகள் மற்றும் சகாக்களுடன் இணைந்து செயற்பட எதிர்பார்க்கின்றோம்.

நாம் அடைந்த முன்னேற்றம் பற்றி நான் பெருமைகொள்கின்றேன். அமைச்சின் எமது அர்ப்பணிப்புள்ள அலுவலர்களின் முயற்சிகளையும் நாட்டின் ஒவ்வொரு பிரசைக்கும் நவீன வசதிகள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவினை வழங்குவதற்கான அவர்களின் தொடர்ச்சியான ஈடுபாட்டையும் பாராட்டுகின்றேன்.



எஸ்.எம்.கோட்டாபய ஜயரத்ன
செயலாளர்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| தூரநோக்கும் செயற்பணியும் | 1 |
| அமைச்சின் குறிக்கோள்கள் | 2 |
| பொறுப்புக்களும் பணிகளும் | 3 |
| அமைச்சின் முக்கியத்துவ பகுதி | 4 |
| ஒழுங்கமைப்பு வரைபடம் | 5 |
| மனித வளங்கள் | 6 |
| திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி சார்ந்த பிரவேசங்கள் | 7 |
| தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சு | 8 |
| மிஸ்ஸக இ- நெனபியச | 9 |
| • கருத்திட்ட அறிமுகம் | 10 |
| • கருத்திட்ட அனுகூலங்கள் | 10 |
| • மிஸ்ஸக இ – நெனபியச தாபிப்பு முன்னேற்றம் | 11 |
| • மிஸ்ஸக இ – நெனபியச தாபிப்பு முன்னேற்றம் – மாவட்ட ரீதியில் | 12 |
| • மிஸ்ஸக இ-நெனபியசவின் பரம்பல் | 13 |
| • ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை கணனி ஆய்வுகூடங்கள் | 14 |
| • மிஸ்ஸக இ-நெனபியச ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 15 |
| • அறிமுகம் | 15 |
| • ஆசிரியர் பயிற்சிக்கான திட்டம் | 16 |
| நெனசல கருத்திட்டம் | 17 |
| • அறிமுகம் | 18 |
| • பிரதான குறிக்கோள்களும் இலக்குகளும் | 18 |
| • நெனசல நிலையமொன்றிற்காக ஒதுக்கப்பட்ட வளங்கள் | 19 |
| • 2014 ஆம் ஆண்டு இலக்கு | 19 |
| • கருத்திட்டத்தின் முன்னேற்றம்-நெனசல நிலையங்கள் தாபித்தல் | 19 |
| • நெனசல நிலையங்களின் பரம்பல் | 20-21 |
| மிஸ்ஸக மாவட்ட தகவல் தொழில்நுட்ப வளங்கள் நிலையம் (MDITRC) | 22 |

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| • அறிமுகம் | 23 |
| • MDITRCs தாபிப்பதற்கான நோக்கங்கள் | 23 |
| • கருத்திட்டத்தின் நன்மைகள் | 23 |
| • MDITRCs தாபிப்பின் முன்னேற்றம் | 24 |
| • MDITRCs இன் பரம்பல் | 25 |
| நெனசல நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய கருத்திட்டங்கள் | 26-30 |
| இ-அரசாங்க கொள்கையை நடைமுறைப்படுத்துதல் | 31 |
| தேசத்திற்கு மகுடம் | 32 |
| தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் கண்காட்சியும் | 33 |
| • நோக்கங்களும் குறிக்கோள்களும், தேசத்திற்கு மகுடம் – 2013 | 33 |
| • தேசத்திற்கு மகுடம் – 2014 | 34 |
| • தேசத்திற்கு மகுடம் – 2015 | 35 |
| • கோதவில வத்த கண்காட்சி மைதான நிர்மாணிப்புகள் | 36 |
| • சரசவி பிளேஸ் கண்காட்சி மைதானம் நிர்மாணிப்பு | 37 |
| தேசத்திற்கு மகுடம் – 2013 நிர்மாணிப்புகள் | 38 |
| தொலைத் தொடர்புகள் திணைக்களம் | 39-40 |
| அமைச்சின் நிதிசார் முன்னேற்றம் | 41 |
| • அறிமுகம் | 42 |
| • அமைச்சின் செலவினத்தலைப்பின் கீழ் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களின் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுகள் ஆகியன | 43 |
| • அமைச்சின் செலவினத்தலைப்பின் கீழ் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களின் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுகள் | 44 |
| • செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 45 |
| • அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 46 |

# தூரநோக்கு

டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் வலுப்பெற்ற இலங்கையை நோக்கி.

# செயற்பணி

பொது மக்களின் தகவல் தொழில் நுட்பத்திறனை மேம்படுத்துதல், இலங்கைத் தகவல் உள்ளடக்கத்தைப் பிரபல்யப்படுத்துதல் மற்றும் நவீன தொழில்நுட்பப் பாவனையிலிருந்து தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றின் அபிவிருத்தி மூலம் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை காலநேரத்திற்கு, மக்கள் ஈடுகொடுக்கக்கூடிய விலையில் ,நாட்டின் எல்லா இடங்களும் உள்ளடங்கும் வகையில் சிறந்த ஒரு சேவையைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் அனைவருக்குமான ஒரு பிரவேசத்தை ஏற்படுத்திக்கொடுத்தல்.

## அமைச்சின் குறிக்கோள்கள்

1. தேசியகொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுக்கு அமைய தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்ற விடயத்திற்கு உரிய சரியான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல்.

2. 2016 ஆம் ஆண்டளவில் 75%ற்கும் 2020 இல் 100% ற்கும் இலங்கை மக்களின் கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பத்திறனை மேம்படச்செய்தல்.

3. தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல்நுட்பம் ஆகிய துறைகளில் தொழில்வாய்ப்புகளை 2016 ஆம் ஆண்டளவில் 100 000 ஆகவும் 2020 இல் 250 000 ஆகவும் அதிகரிக்கச் செய்தல்.

4. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவன வருமானத்தினை 2016 ஆம் ஆண்டளவில் 1பில்லியன் ஐஅடொலர் ஆகவும் 2020 இல் 5 பில்லியன் ஐஅடொலர் நிலைக்கும் உயர்த்துதல்.

5. தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் ஆகியன சார்ந்த துறைகளில் முதலீட்டை ஊக்குவித்தல்.

6. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரயோகங்களுக்கான ஊக்குவிப்பின் ஊடாக நல்லாட்சியை மேம்படுத்தல்.

# தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சின் பொறுப்புக்களும் பணிகளும்

## அமைச்சின் விடயங்களும் பொறுப்புக்களும் சாட்டப்பட்டுள்ள விதம்

மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களின் கட்டளையின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதிய 1681/3 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளவாறு தொலைத்தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் விடயங்களும் பொறுப்புக்களும் .

## அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்

1. இலங்கைத் தகவல் தொழில் நுட்ப முகவர் நிலையம்
2. ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் மற்றும் அதன் கட்டுப்பாட்டுக் கம்பனிகள், அதனுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்கள்
3. தொலைத்தொடர்புகள் திணைக்களம் (ஒழித்துக் கட்டப்பட்டதன் கீழ்)

## அமைச்சின் மூலம் செயற்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்

1. 2003 இன் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் பற்றிய சட்டம்.
2. 2006 இன் 19 ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய சட்டம்.
3. 2008 இன் 33 ஆம் இலக்க தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் பற்றிய (திருத்தல்) சட்டம்.
4. 2011 இன் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் வரி பற்றிய சட்டம்.
5. 2013 இன் 8 ஆம் இலக்கத் தொலைத்தொடர்புகள் வரி பற்றிய (திருத்தல்) சட்டம்
6. தற்பொழுது நடைமுறையில் இருக்கின்றதும் ஒரு பிற அமைச்சின் கீழ் ஒப்படைக்கப்படாத, இந்த அமைச்சின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளதும் மற்றும் அமைச்சின் கீழ் இயங்குகின்ற ஏனைய நிறுவனங்கள் தொடர்பானதுமான சட்ட விதிமுறைகள்

## தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் (MTIT) முக்கியத்துவ பகுதி 2014-2020

**1. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கல்வி மற்றும் திறன்களை மேம்படுத்தல்**

- பொது கல்வியில் "மிஸ்ஸக தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள்" ஊடாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கல்விக்கு ஆதரவளித்தலும் நெனசல நிலையங்களின் ஊடாக கிராமிய மட்ட தகவல் தொழில்நுட்ப கல்வியறிவை உறுதிப்படுத்தலும்.
- தகவல் தொழில்நுட்ப கல்வியினை மேம்படுத்தலும் பொது மற்றும் தனியார் துறை ஊழியர்களின் தொழில்சார் தரத்தை உறுதிப்படுத்தலும்.
- தகவல் தொழில்நுட்ப துறையின் வழிமுறைகளை இனங்காணலும் வலுப்படுத்தலும் ஊடாக தொழில்சார் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை ஊக்குவித்தல்.

**2. புத்தாக்கத்திற்கும் போட்டித்தன்மை உற்பத்தித்திறனை தூண்டவும் தகவல் தொழில்நுட்ப துறையிலுள்ள சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு உதவுதல்.**

**3. கிராமிய பிரதேச மட்ட அபிவிருத்தி வேலைகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பயன்பாட்டினை ஊக்குவித்தல்**

- மாவட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வளநிலையங்களை தாபிப்பதன் மூலம் தேசிய மட்ட அபிவிருத்திக்கு பங்களித்தல்

- பின்வருவன முன் மொழியப்பட்ட நிலையங்களின் பிரதான இலக்குகள்

- மாவட்ட தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி திட்டத்தினை உருவாக்கலும் நடைமுறைப்படுத்தலும்
- மாவட்ட மட்ட நிர்வாகத்தினை ஒருங்கிணைத்தல்
- தொழில்முனைவோர் அபிவிருத்தி மற்றும் பயிற்சி
- மாவட்ட தரவு சேமித்தல் செய்முறையும் பரப்புதலும்


**4. தேசிய மற்றும் துணைத் தேசிய மட்டத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மீது திறன் விரிவாக்கம்.**

- தேசிய மற்றும் துணைத் தேசிய மட்ட நிறுவனங்கள் மற்றும் நிபுணர்களை ஒருங்கிணைப்பதன் மூலம் தகவல் தொழில்நுட்ப துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை ஊக்குவித்தல்.
- பயன்பாடு மற்றும் நலஆய்வுகள் ஊடாக தரவு மற்றும் தகவல் கிடைக்கச்செய்தல்.

தழுவுமை ஆராய்ச்சிகளை மேம்படுத்துதல்.

# தொலைத்தொடர்பாடல் மற்றும் தகவல்தொழில்நுட்பவியல் அமைச்சு

• ஒழுங்கமைப்பு வரைபடம்



# மனித வளங்கள்

**ஆளணி தகவல்**

| பதவி | சேவை | அனுமதிக்கப் பட்ட ஆளணி | தற்பொழுது இருக்கின்ற ஆளணி | நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| செயலாளர் | | 01 | 01 | - |
| மேலதிகசெயலாளர் | இ.நி.சே (விசேட) தரம் | 01 | 01 | - |
| பிரதம கணக்காளர் | இ.க.சே I | 01 | 01 | - |
| சிரேஷ்ட உதவிச்செயலாளர் | இ.நி.சே I | 01 | 01 | - |
| உதவிச்செயலாளர் | இ.நி.சே III | 01 | 01 | - |
| பிரதி/ உதவிப் பணிப்பாளர் | இ.நி.சே.II/III | 01 | 01 | - |
| பிரதி/ உதவிப் பணிப்பாளர் | இ.திசே. II/III | 01 | 01 | - |
| பிரதி/ உதவிப் பணிப்பாளர் | இ.பொ.சே. II/III | 01 | 01 | - |
| கணக்காளர் ( உள்ளக கணக்காய்வு) | இ.க.சே . II/III | 01 | 01 | - |
| நிர்வாக அலுவலர் | அ.மு.உ.சே (சுப்ரா தரம்) | 01 | - | 01 |
| மொழிபெயர்ப்பாளர் | மொழிபெயர்ப்பாளர் சேவை | 02 | 01 | 01 |
| செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் | | 01 | 01 | - |
| தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | இ.த.தொ.தொ.நு சேவை II | 26 | 01 | 25 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | அ.உ.சே | 11 | 05 | 06 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ.சே I/II/III | 22 | 18 | 04 |
| புகைப்படக் கருவி இயக்குநர் | தற்காலிக | 01 | 01 | - |
| அலுவலகப் பணியாள் | அலுவலகப் பணியாள் சேவை I/II/III | 10 | 06 | 04 |
| சாரதி | சாரதி சேவை I/II/III | 10 | 10 | - |
| **மொத்தம்** | | **93** | **52** | **41** |

## திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி சார்ந்த பிரவேசங்கள்

அமைச்சின் 2014 வருடாந்த நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க அமைச்சின்கீழ் பின்வரும் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன

### 1.மிஸ்ஸக இ-நெனபியச பாடசாலைக் கணனி ஆய்வுகூட நிகழ்ச்சித்திட்டம்

- பாடசாலை கணனி ஆய்வுகூடங்களை தாபித்தலும் ஆசிரியர் பயிற்சியும்

### 2.நெனசலவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள்

- 1000 நெனசல நிலையங்களை அடையும் நோக்குடன் 269 புதிய நிலையங்களை தாபித்தல்.
- தற்போதுள்ள 100 நிலையங்களை புதுப்பித்தல்.
- நெனசல நிலையங்களின் விழிப்புணர்வு மற்றும் பயன்பாட்டினை வலுப்படுத்தல்
- இ-சுவாபிமானி
- வைத்தியசாலை ஆரோக்கிய தகவல் முகாமை முறைமை
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கல்வியறிவு ஆய்வு -2014
- இ- அரசாங்க நிலைமை ஆய்வு / அடிப்படைத் தரவு சேகரிப்பு
- கைத்தொழில் அறிவு விரிவாக்கம்
- சிறிய நடுத்தர தொழில் நிறுவனங்களின் தகவல் தொழில்நுட்ப வியாபார அபிவிருத்தி
- IT /ITES விற்பனையாளர் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம்
- தொழில்நுட்ப ஆதரவு நிகழ்ச்சித்திட்டம்
- தொழில் வழிகாட்டல் மற்றும் திறன் சீரமைப்பு
- இலங்கை அரசாங்க இ-தலைமைத்துவ திறன் அபிவிருத்தி (GoSL)
- தேசிய சான்றுப்படுத்தல் அதிகாரசபை கருத்திட்டம்
- GoSL இன் இலத்திரனியல் சேவைகளை விருத்திசெய்தல்
- மிஸ்ஸக தகவல் தொழில்நுட்ப வள நிலையங்களை தாபித்தல்

### 3. மிஸ்ஸக தகவல் தொழில்நுட்ப வள நிலையம்

### 4.தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் துறையில் வெளிநாட்டவரின் அறிவு மற்றும் அனுபவத்தினை நாட்டுக்கு பெற்றுக்கொள்ளும் நோக்குடன் அவர்களுக்கு விசா வழங்கல்.

### 5.அமைச்சின் கீழ் இயங்கும் குழுக்கள்

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தரவு மீதான தேசிய குழு
- தனியார் மற்றும் பொது தகவல் தொழில்நுட்ப நிபுணர்கள் தேசிய ஒருங்கிணைப்பு குழு
- தகவல் தொழில்நுட்ப கல்வியறிவு மீதான தேசிய குழ

### 6.தயட்ட கிருல தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் கண்காட்சியும்

# தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சு

- மிஸ்ஸக நென பியச
- நெனசல கருத்திட்டம்
- மாவட்ட தகவல் தொழில்நுட்ப வளங்கள் நிலையம் (DITRC)
- இ-அரசாங்க கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்
- தேசத்திற்கு மகுடம்


මිස්සක
ඉ-නැණ පියස
மிஸ்ஸக இ-நெனபியச
MISSAKA e-NENA PIYASA

# மிஸ்ஸக இ –நெனபியச

## கருத்திட்டத்திற்கான அறிமுகம்

2016 ஆம் ஆண்டளவில் 75% வீதம் வரை நாடு தகவல் தொழில் நுட்ப அறிவை அடையும் போது பாடசாலை மாணவர்கள் அதன் ஒரு முக்கிய இலக்கு குழுவாக விளங்கும். கிராமப் பாடசாலைகளில் கணனி ஆய்வு கூடங்களை நிர்மாணிப்பதும் திறனை கட்டியெழுப்பலும் இந்தக் கருத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தகவல் தொழில்நுட்பத்திற்கான இலகுவான பிரவேசத்தினை ஏற்படுத்தல், தகவல் தொழில்நுட்ப கல்வியறிவை அதிகரித்தல் மற்றும் எதிர்கால தொழில் வாய்ப்பை பாதுகாத்தல் என்பன இக்கருத்திட்டத்தின் விசேட குறிக்கோள்கள் ஆகும்.

**மிஸ்ஸக கணனி ஆய்வு கூடத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்படும் வசதிகள் பின்வருமாறு காணப்படும்.**

| | விடயம் | அலகுகளின் எண் |
|---|---|---|
| 1 | கணனிகள் | 10 |
| 2 | அச்சீட்டு இயந்திரம் | 01 |
| 3 | ஸ்கேனர்கள் | 01 |
| 4 | மல்டிமீடியா ப்ரொஜெக்டர் மற்றும் ஸ்கிறீன் | 01 |
| 5 | வலையமைப்புச் செய்தல் | 01 |
| 6 | கணனிக் கதிரைகள் | 20 |
| 7 | கணனி மேசைகள் | 10 |

**பாடசாலை கணனி ஆய்வுகூடத்தினை தாபிப்பதற்கான மொத்த மதிப்பீட்டுசெலவு ரூபா 1.7 மில்லியன் .**

**2014 ஆம் ஆண்டில் இக்கருத்திட்டத்தின் மொத்த செலவு ரூபா 531 மில்லியனாக இருந்தது.**

## இக்கருத்திட்டத்தின் நலன்கள்

- நாட்டின் தகவல்தொழில்நுட்ப அறிவை அதிகரிக்க பங்களித்தல்.
- இக்கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதனூடாக 150,000 மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப கல்வி அறிவினையூட்டல்.
- 605 மிஸ்ஸக கணனி ஆய்வுகூடங்களை தாபிப்பதன் மூலம் பாடசாலைகளின் தகவல் தொழில்நுட்ப திறனை அதிகரித்தல்.
- தரமான விளைவை பெறுவதற்காக 896 ஆசிரியர்களுக்கு பயிற்சியளித்தல்.

## மிஸ்ஸக இ –நெனபியச தாபிப்பு முன்னேற்றம்




**அமைச்சு 2014 ஆம் ஆண்டில் மொத்த இலக்காக 600 மிஸ்ஸக நெென பியச, பாடசாலை கணனி ஆய்வுகூடங்களை தாபிக்க திட்டமிட்டிருந்தது. 605 மிஸ்ஸக நென பியச தாபிக்கப்பட்டதன் மூலம் அவ் ஆண்டினுள் அவ் இலக்கு அடையப்பட்டது.**

**2012 - 2013 காலப்பகுதியில், 164 பாடசாலை கணனி ஆய்வுகூடங்கள் தாபிக்கப்பட்டன.**

**மேலும், 2014 ஆம் ஆண்டில் 441 பாடசாலை கணனி ஆய்வுகூடங்களை தாபிக்க அமைச்சு திட்டமிட்டிருந்தது.**

**தற்போதைய ஆண்டில் அடையப்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு,**


- **303 கணனி ஆய்வுகூடங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன**
- **96 ஆய்வுகூடங்கள் முழுமையாக முடிவடைந்து ஆரம்பிக்க தயாராக உள்ளன**
- **42 ஆய்வுகூடங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன**

## கருத்திட்டத்தின் முன்னேற்றம் – மாவட்ட ரீதியில்

| | மாவட்டம் | இலக்கு | ஆரம்பிக்கப்பட்டவை | நடைபெற்றுக் |
|---|---|---|---|---|
| 1 | குருனாகல் | 17 | 17 | |
| 2 | புத்தளம் | 11 | 11 | |
| 3 | அம்பாந்தோட்டை | 17 | 17 | |
| 4 | கம்பஹா | 7 | 7 | |
| 5 | வவுனியா | 5 | | 5 |
| 6 | மாத்தறை | 10 | 10 | |
| 7 | காலி | 10 | 10 | |
| 8 | இரத்தினபுரி | 12 | 12 | |
| 9 | கொழும்பு | 13 | 13 | |
| 10 | கேகாலை | 219 | 217 | 2 |
| 11 | மாத்தளை | 11 | 11 | |
| 12 | கண்டி | 2 | 2 | |
| 13 | மட்டக்களப்பு | 15 | 15 | |
| 14 | திருகோணமலை | 15 | 15 | |
| 15 | பொலன்னறுவை | 16 | 16 | |
| 16 | அம்பாறை | 125 | 90 | 35 |
| 17 | அநுராதபுரம் | 100 | 100 | |
| | **மொத்தம்** | 605 | 563 | 42 |

# இ-நெனபியசவின் பரம்பல்

பாடசாலைக் கணனி ஆய்வுகூட கருத்திட்ட நிலை



# ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை கணனி ஆய்வுகூடங்கள்



அறுகம கனிஷ்ட வித்தியாலயம்-கேகாலை



பொரலங்கட ம.வி தெகியோவிட்ட -கேகாலை



வெரங்கேதகொட ம.வி யுகன -அம்பாறை



தீரானந்த வித்தியாலயம் -பூசா ,காலி



பொலிபோருவ முஸ்லிம் வித்தியாலயம் மாவனல்ல கேகாலை



கனகமுவ ராஜசிங்க ம.வி கலிகமுவ- கேகாலை

# மிஸ்ஸக இ-நெனபியச ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்




கேகாலை மாவட்டத்தில் ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

## அறிமுகம்

இக்கருத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு இ- ஆய்வுகூடங்களுலிருந்தும் இரு ஆசிரியர் பயிற்சியளிக்கப்படவுள்ளனர்.

பயிற்சியானது இலங்கை மைக்ரோசொப்ட்,தேசிய கல்வி நிறுவகம் மற்றும் சப்ரகமுவ ,கிழக்கு மாகாணங்களின் மாகாணக்கல்வி திணைக்களங்களினால் நடாத்தப்படுகின்றன.

## குறிக்கோள்களும் இலக்குகளும்

### பிரதான குறிக்கோள்கள்

- எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறை பெறுவதற்காக கணனிகள் மற்றும் உபகரணங்களின் சரியான பயன்பாடு.
- முறையான தகவல் தொழில்நுட்ப கல்வியை வழங்குவதற்காக ஆசிரியர் பயிற்சி.
- ஆசிரியர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்தல்.
- கருத்திட்டத்தின் நிலையான தன்மையை பேணல்

## ஆசிரியர் பயிற்சிக்கான திட்டம்

| | மிஸ்ஸக இ-நெனபியச | | ஆசிரியர் பயிற்சி | | |
|---|---|---|---|---|---|
| | மாவட்டம் | இலக்கு 2014 | பயிற்சியளிக்க தேர்ந் தெடுக்கப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கை | முன்னேற்றம் | |
| | | | | பயிற்சியை முடித்துக் கொண்ட ஆசிரியர் எண்ணிக்கை | செலவு ரூபா. |
| 1 | கேகாலை | 169 | 302 | 259 | 1,493,700.40 |
| 2 | திருகோணமலை | 14 | 30 | - | - |
| 3 | பொலன்னறுவை | 16 | 32 | - | - |
| 4 | மட்டக்களப்பு | 15 | 30 | - | - |
| 5 | அம்பாறை | 115 | 250 | 35 | 93,927.00 |
| 6 | அம்பாந்தோட்-டை | 15 | 18 | - | - |
| 7 | அனுராதபுரம் (2012) | - | 600 | 600 | 1,620,600.00 |
| | **மொத்தம்** | **344** | **1,262** | **894** | **3,208,227.40** |

அறிவகம் - Nenasala

විශ්ව දැනුම ගමට  உலக அறிவு கிராமத்திற்கு

# நெனசல கருத்திட்டம்

**நெனசல உலகில் சிறந்த கிராமிய தொலை நிலைய கருத்திட்டமாக 2014 இல் ஐக்கிய அமெரிக்காவின் பில் அன்ட் மிலிண்ட கேட்ஸ் மன்றத்தினால் வழங்கப்பட்ட சர்வதேச கற்றல் அணுக்கத்திற்கான விருதினை வென்றது**

## அறிமுகம்

இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் கீழ் இக்கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இக்கருத்திட்டம் கிராமிய மற்றும் நகர்ப்புற மக்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகளை பரப்புவதற்காக இலங்கையின் எல்லா பாகங்களிலும் நிறுவப்படும் தொலை நிலையங்கள் அல்லது அறிவு நிலையங்களின் பல்வேறு மாதிரிகளை அறிமுகப்படுத்த நெனசல (அறிவகம்) எனும் கருத்திட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்கப்பட்டது.

முதலாவது நெனசல நிலையம் கதிர்காம கிரிவிகாரவில் 2005 சனவரி 01 ஆந்தேதி தாபிக்கப்பட்டது.

அமெரிக்க பில் மற்றும் மிலிண்ட கேட்ஸ் மன்றத்தினால் இவ்வருடம் சர்தேச கற்றல் அணுகலிற்கான விருதை வழங்கியதன் மூலம் இக்கருத்திட்டம் பெரிதும் பாராட்டப்பட்டது. இது இ- சிறீலங்கா முயற்சிகளின்கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற துணை கருத்திட்டங்களில் ஒன்றாகும். இ-இலங்கை முயற்சிகளின் பிரதான குறிக்கோள் குடிமக்களுக்கான தகவல் தொடர்பாடல் துறைக்கான இலகுவான அணுகலை உருவாக்கல் ஆகும். நாட்டின் ஜனநாயகத்தினை வலுப்படுத்தல்,பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல், சமுக மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பன அடையவுள்ள இலக்குகள் ஆகும்.

நெனசல நிலையங்கள் சமுக அடிப்படையிலான ஒழுங்கமைப்புகள், கிராமிய நூலகங்கள் மற்றும் கோவில்களில் தாபிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் 14,000 நெனசல நிலையங்களை தாபித்தல் பிரதான இலக்காகும்

## பிரதான குறிக்கோள்களும் இலக்குகளும்

நெனசல நிலையங்களை தாபிப்பதன் மூலம் நாட்டின் எல்லா பாகங்களிலுமுள்ள கிராமபுற தகவல் தொடர்பாடல் தேவைகளை நிவர்த்திசெய்யும் பொருட்டு உட்கட்டமைப்பு தேவைப்பாடு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் எற்பாட்டினை பூர்த்திசெய்தல் இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும்.

இக்கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோள்கள்

- குடிமக்களுக்கான தகவல் மற்றும் தொடர்பாடல் துறைக்கான இலகு அணுகலை உருவாக்கல்
- நியாயமான விலையில் சேவைகளை வழங்கல்.

**நெனசல நிலையமொன்றிற்காக ஒதுக்கப்பட்ட வளங்கள்**

| S/N | விடயம் | அலகுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கணனிகள் | 04 |
| 2 | போட்டோ கொப்பி இயந்திரம் | 01 |
| 3 | வெப் கமரா | 01 |
| 4 | வலையமைப்பு மற்றும் இண்டர்நெட் தாபித்தல் | 01 |

நெனசல நிலையங்களை தாபிக்க மதிப்பிடப்பட்ட செலவு இலங்கை ரூபா 01மில்லியன்.


**2014 ஆம் ஆண்டு இறுதியினுள் 1000 நிலையங்களை பூரணப்படுத்தல் நெனசல கருத்திட்டத்தின் பிரதான இலக்காகும். மேலும் தற்போதுள்ள 100 நெனசல நிலையங்களை புதுப்பித்தலும் பயன்பாட்டினை அதிகரிப்பதற்கான மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களும் குறிப்பிடத்தக்க முன்னுரிமையாக உள்ளது.**

## 2014 ஆம் ஆண்டு இலக்கு

நாட்டின் 25 மாவட்டங்களிலும் 1000 மத்திய நிலையங்கள் அமைக்கும் நெனசல திட்ட இலக்கினை பூரணப்படுத்துவதற்காக இவ் ஆண்டினுள் 259 நெனசல நிலையங்கள் தாபிக்க திட்டமிடப்பட்டுள்ளன.

மேலும் 100 தற்போதுள்ள மத்திய நிலையங்கள் புதுப்பிக்க இனங்காணப்பட்டுள்ளன. நெனசல பயன்பாட்டினை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது.


## கருத்திட்டத்தின் முன்னேற்றம்-நெனசல நிலையங்கள் தாபித்தல்



## நெனசல நிலையங்களின் பரம்பல்

| | மாவட்டம் | இலக்குகள் | ஆரம்பிக்கப்பட்டது | நடைபெற்றுக் கொண்டிருப்பது |
|---|---|---|---|---|
| 1 | அம்பாறை | 60 | 51 | 3 |
| 2 | அநுராதபுரம் | 66 | 61 | 2 |
| 3 | மட்டக்களப்பு | 42 | 27 | 2 |
| 4 | பதுளை | 45 | 55 | 4 |
| 5 | கொழும்பு | 39 | 33 | 8 |
| 6 | காலி | 57 | 47 | 5 |
| 7 | கம்பஹா | 39 | 29 | 2 |
| 8 | அம்பாந்தோட்டை | 36 | 38 | 3 |
| 9 | யாழ்ப்பாணம் | 45 | 30 | |
| 10 | களுத்துறை | 42 | 38 | 1 |
| 11 | கண்டி | 60 | 71 | 2 |
| 12 | கேகாலை | 40 | 89 | 3 |
| 13 | குருனாகல் | 90 | 75 | 5 |
| 14 | மன்னார் | 15 | 9 | |
| 15 | மாத்தறை | 48 | 48 | 2 |
| 16 | மாத்தளை | 33 | 28 | 1 |
| 17 | மொனராகலை | 33 | 59 | 1 |
| 18 | நுவரெலியா | 15 | 30 | 3 |
| 19 | பொலன்னறுவை | 21 | 32 | 1 |
| 20 | புத்தளம் | 48 | 39 | 3 |
| 21 | இரத்தினபுரி | 51 | 51 | 6 |
| 22 | திருகோணமலை | 33 | 36 | 1 |
| 23 | வவுனியா | 12 | 14 | |
| 24 | முல்லைத்தீவு | 18 | 9 | |
| 25 | கிளிநொச்சி | 12 | 6 | 1 |
| | **மொத்தம்** | **1000** | **1005** | **59** |

# நெனசல நிலையங்களின் பரம்பல்



දිස්ත්‍රික් තොරතුරු තාක්ෂණ මධ්‍යස්ථානය

மாவட்ட தகவல் தொழில்நுட்ப நிலையம்

District Information Technology Centre

# மாவட்ட தகவல் தொழில்நுட்ப வளங்கள் நிலையம் (MDITRC)

## அறிமுகம்

இந்நிலையம் மாவட்ட மட்டத்தில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான எல்லா விடயங்களையும் மாவட்ட நிர்வாகத்துடன் கூட்டாக கவனம் செலுத்தும் மையநிலையமாக உள்ளது.

MTIT 25 மிஸ்ஸக மாவட்ட தகவல் தொழில்நுட்ப வளங்கள் நிலையங்களை தாபிக்க திட்டமிட்டுள்ளது.இவ்வருடத்தில் இக்கருத்திட்டத்தின் பிரதான இலக்கு 10 மிஸ்ஸக மாவட்ட தகவல் தொழில்நுட்ப வளங்கள் நிலையங்களை தாபிப்பதாகும்.

இது நவீன கணனிகள், அதிவேக இண்டர்நெட் இணைப்புகள், தரவுசேகரிப்பு ,அச்சிடல் போன்ற வசதிகளையும் பயிற்சிகள் நடாத்தவும் சேவைகளை வழங்கவும் திறமையான ஆளணியினையும் கொண்டுள்ளது.

2014 ஆம் ஆண்டில் தொலைத்தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சானது மாகாண அடிப்படையில் மிஸ்ஸக மாவட்ட தகவல்தொழில்நுட்ப வளங்கள் நிலையங்களை தாபிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

MDITRCs உணவு விடுதி மற்றும் சுகாதார வசதிகளை உள்ளடக்கும்.

## MDITRCs தாபிப்பதற்கான நோக்கங்கள்

பிராந்திய மற்றும் கிராமிய அபிவிருத்திக்காக தனியார் மற்றும் பொதுமக்கள் பங்கேற்பை பெறல், மாவட்ட தகவல்தொழில்நுட்ப வள அடிப்படையை வலுப்படுத்துதல்,வேலைவாய்ப்பை உருவாக்குதல் மற்றும் தொழில்முனைவோருக்கு வசதியளிப்பதனூடாக பொது மக்கள் வருமானத்தை மேம்படுத்துவதற்கான அடிப்படையொன்றை விருத்திசெய்தல்.

## கருத்திட்டத்தின் நன்மைகள்

பிரதான நேரடியான நேரடியற்ற நன்மைகள் பின்வருமாறு;.

- பயிற்சி மற்றும் தகவல்தொழில்நுட்ப சான்றிதழ்
- சேவை வழங்கல் நிலையம்
- தேசிய மற்றும் மாவட்ட மட்டங்களில் ஒன்றிணைக்க வசதிப்படுத்துதல்
- தகவல்தொழில்நுட்ப அறிவை அதிகரித்தல்
- அபிவிருத்தி மற்றும் பிராந்திய நிருவாகத்தில் தகவல்தொழில்நுட்ப பொருத்தமான பயன்பாடு
- வியாபாரசெய்முறையில் ஒப்பந்த சேவைஅமர்த்தல் வசதிகள்
- நேரடி வேலைவாய்ப்பை உருவாக்குதல்
- மனித வளங்களை விருத்திசெய்ய உதவுதல்

## நிலைய பொது நிர்வாகம்

குழுவொன்றானது மாவட்டசெயலாளர், பிரதேச செயலாளர்,தகவல் தொழில்நுட்ப துறையில் வல்லுநர், MTIT இன் மாவட்ட தகவல்தொழில்நுட்ப அலுவலர் மாவட்ட கல்வி அலுவலகபிரதிநிதி,பொதுமக்கள் பிரதிநிதி மற்றும் மாவட்டத்தின் பொருத்தமான பட்ட்டதாரிகள் இருவர் ஆகியோரை கொண்டுள்ளது.


# MDITRCs தாபிப்பின் முன்னேற்றம்

| | மாகாணம் | மாவட்டம் | முன்னேற்றம் |
|---|---|---|---|
| 1 | வடக்கு | **யாழ்ப்பாணம்** | **ஆரம்பிக்கப்பட்டது** |
| 2 | | மன்னார் | ஆரம்பிக்கப்பட்டது |
| 3 | **கிழக்கு** | அம்பாறை | ஆரம்பிக்கப்பட்டது |
| 4 | **வடக்கு** | வவுனியா | கட்டிடம் புதுப்பிக்கப்பட்டுள்ளது |
| 5 | **வட மத்தி** | பொலன்னறுவை | 2015 இல் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. |
| 6 | **ஊவா** | மொனராகலை | |
| 7 | **மேல்** | களுத்துறை | ஆரம்பிக்க தயாராகவுள்ளது |
| 8 | **வடமேற்கு** | புத்தளம் | ஆரம்பிக்க தயாராகவுள்ளது |
| 9 | **தெற்கு** | காலி | ஆரம்பிக்க தயாராகவுள்ளது |
| 10 | **மத்திய** | மாத்தளை | ஆரம்பிக்க தயாராகவுள்ளது |
| 11 | **சப்பிரகமுவ** | கேகாலை (கல்கமுவ) | முதலாம் மாடியின் கொங்கிறீட் தட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ளது |



**2014 இல் அம்பாறையில் MDITRCs, ஆரம்பிப்பு வைபவம்**

# MDITRCs இன் பரம்பல்



**நெனசல நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி கருத்திட்டங்கள்**

| தொடர் இல | முன்மொழிவின் பெயர் | பௌதிக முன்னேற்றம் | மொத்த மதிப்பீட்டு செலவு (ரூபா மில்) | 31.12.2014 இல் செலவு |
|---|---|---|---|---|
| 1 | இ-சுவாஹிமானி | தேசிய சிறந்த இ-உள்ளடக்க விருதான இ-சுவாஹிமானி மீதான விழிப்புயர்வு பூரணப்படுத்தப்பட்டது. வெப் தளம் மீளவடிவமைக்கப்பட்டது .3 வெளிநாட்டு யூரர்கள் உள்ளடங்கலான 13 யூரர்களுடன் யூரி செய்முறை மேற்கொள்ளப்பட்டது. 254 விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. 25 வெற்றியாளர்கள், 15 விசேட தகுதியானோர் தெரிவு செய்யப்பட்டனர். பரிசில் வழங்கும் கால நிகழ்வு நடைபெற்றது. | 6.62 | 8.33 |
| 2 | வைத்தியசா-லை சுகாதார தகவல் முகாமை முறைமை | வெளியீட்டு மதிப்பீடு பூரணப்படுத்தப்பட்டது. எதிர்கால உத்திக்காக கற்றறிந்த விடயங்கள் மற்றும் சிபார்சுகளுடனான இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 2.90 | 0.20048 |
| 3 | உண்மைத் தன்மையை அதிகப்படுத்தி தொல்பொருளியல் தளங்களை மீள் உருவாக்கல் | நேரம் போதாமையினால் ரத்துச்செய்யப்பட்டது | 10.50 | இக் கருத்திட்டம் ரத்துச் செய்யப்பட்டது |
| 4 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு ஆய்வு | பூரணப்படுத்த நேரம் போதாமையினால் ஆய்வு நடைமுறைப்படுத்தப்படவில்லை | 12.91 | இக் கருத்திட்டம் ரத்துச் செய்யப்பட்டது |
| 5 | இ-அரசாங்க நிலைமை ஆய்வு / அடிப்படை தரவுசேகரிப்பு | நேரம் போதாமையினால் ஆய்வு நடைமுறைப்படுத்தப்படவில்லை | 7.084 | இக் கருத்திட்டம் ரத்துச் செய்யப்பட்டது |

**நெனசல நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி கருத்திட்டங்கள்**

| தொடர் இல | முன்மொழிவின் பெயர் | பௌதிக முன்னேற்றம் | மொத்த மதிப்பீட்டு செலவு (ரூபா மில்) | 31.12.2014 இல் செலவு |
|---|---|---|---|---|
| 6 | கைத்தொழில் அறிவை விரிவாக்கல் | பிக் தரவு மற்றும் ஹடுப் பயிற்சி ( 43 தொழில்நிபுணர்)<br>ஹைபிரிட் மொபைல் பிரயோக அபிவிருத்தி (52 தொழில்நிபுணர்)<br>கண்டுபிடித்தல், புத்தாக்கம் மற்றும் தனியுரிமை (26 தொழில்நிபுணர்)<br>ஆக்கவுரிமை எழுத்து மற்றும் உருவாக்கம் (38 தொழில்நிபுணர்)<br>தொழில்நுட்ப எழுத்துப் பயிற்சி (27 தொழில்நிபுணர்)<br>முன்வைத்தல்திறன் பயிற்சி (50 தொழில்நிபுணர்)<br>கொம்பிரியா குளவுட் எசன்சல் (52 தொழில்நிபுணர்) | 9.98 | 13.80 |
| 7 | SME தகவல் தொழில்நுட்ப வியாபார அபிவிருத்தி / பிராந்திய SME மற்றும் நிபுணர் தகவல் தொழில்நுட்பம் | சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் சம்பந்தமான இன்போரெல் ( 16 கம்பெனிகள்)<br>கண்காட்சியை நடாத்துதல்<br>கண்காட்சிக்கான இலக்கு குழு யாது ? | 5.228 | 1.1784 |
| 8 | IT/ITES விற்பனையாளர் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் | மைக்ரோசொப்ட் சான்றிதழ்கள் (233 தனிநபர்கள்)<br>சிஸ்கோ சான்றிதழ்கள் (326 தனிநபர்கள்)<br>ஒராகிள் சான்றிதழ்கள் (120 தனிநபர்கள் )<br>ரெட் கற் சான்றிதழ்கள் (137 தனிநபர்கள்) | 8.126 | 15.36 |

**நெனசல நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி கருத்திட்டங்கள்**

| தொடர் இல | முன்மொழிவின் பெயர் | பௌதிக முன்னேற்றம் | மொத்த மதிப்பீட்டு செலவு (ரூபா மில்) | 31.12.2014 இல் செலவு |
|---|---|---|---|---|
| 9 | ரெக் ஸ்ராட் சப்போட் நிகழ்ச்சித் திட்டம் | விதை நிதியிடல் (10 கம்பனிகள்)<br>எல்ஈஏஎன் ஸ்ராட்அப் வேலைப்பட்டறை (12 தனிநபர்கள்)<br>புளூ ஓசன் வேலைப்பட்டறை (11 தனிநபர்கள்)<br>யுஐ/ யுஎக்ஸ் வேலைப்பட்டறை (12 தனிநபர்கள்)<br>செக்கியூரிட்ரி எசன்ஸல் வேலைப்பட்டறை(11 தனிநபர்கள்)<br>எம்எஸ் குளவுட் எக்னோமிக்ஸ் வேலைப்பட்டறை (6 தனிநபர்கள்)<br>செலீனியம் வேலைப்பட்டறை (7 தனிநபர்கள்)<br>எம்எஸ் பிஸ்ஸ்பார்க் வேலைப்பட்டறை (10 தனிநபர்கள்)<br>எம்எஸ் ரெஸ்ட் ஓட்டோமேஷன் வேலைப்பட்டறை (13 தனிநபர்கள்)<br>நிதி வேலைப்பட்டறை (24 தனிநபர்கள்)<br>சட்ட வேலைப்பட்டறை (9 தனிநபர்கள்)<br>யுனிசெப் ஹத்தன் (150 தனிநபர்கள்)<br>டபிள்யுசீவை ஸ்பைரலேசன் ஹத்தன் (Hackathon) (88 தனிநபர்கள்)<br>4வைஎப்என்/ எம்டபிள்யுசி (6 கம்பனிகள்) | 12.50 | 11.868 |
| 10 | வாழ்க்கைத்தொழில் வழிகாட்டலும் திறன் ஒழுங்கமைத்தலும் | காலியில் வாழ்க்கைத்தொழில் கண்காட்சி (1100 மாணவர்)<br>கொழும்பில் இன்போரெல் தொழில் கண்காட்சி (5000 மாணவர்)<br>யாழ்ப்பாணத்தில் தொழில் கண்காட்சி (2500 மாணவர்)<br>வடமாகாணத்தில் அதிபர் ஆசிரியர்களுக்கான வேலைப்பட்டறை (120 ஆசிரியர்கள்/அதிபர்கள்) | 8.70 | 7.13 |

**நெனசல நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி கருத்திட்டங்கள்**

| தொடர் இல | முன்மொழிவின் பெயர் | பௌதிக முன்னேற்றம் | மொத்த மதிப்பீட்டு செலவு (ரூபா மில்) | 31.12.2014 இல் செலவு |
|---|---|---|---|---|
| 11 | இலங்கை அரசாங்கத்தின் இ - தலைமைத்துவ திறன் விருத்தி | அரச சான்றிதழ் பாடநெறி<br>மாவட்ட மற்றும் பிரதேச நிருவாகத்தில் அரசாங்க நிறைவேற்றுனருக்கான வேலைப்பட்டறை<br>சிரேஷ்ட அரசாங்க அலுவலர்கள் மற்றும் பிரதான புத்தாக்க அலுவலர்களுக்கான (CIOs )அரசாங்க வதிவிட வேலைப்பட்டறை<br>GoSL CIOs களுக்கான அரச உபாயம் மீதான வேலைப்பட்டறை (விபரங்கள் ணைக்கப்பட்டுள்ளன)<br>ஒரு ஆண்டினுள் எத்தனை அரசாங'க நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன? | 61.00 | 12.30 |
| 12 | தொடரிணைப்பிலான அரச சேவைகளை வழங்குவதற்காக இலத்திரனியல் சேவை(e-service) மற்றும் மொபைல் அடிப்டையிலான சேவை (m-service) அபிவிருத்தி செய்தல் | 50 இசேவை முகாமை / 23 அரசாங்க ஒழுங்மைப்புகளால் வழங்கப்பட்ட சேவை • இலங்கை பொலிஸ் மற்றும் வர்த்தக திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பிரதான இசேவை விருத்தி , CMC , ETF மோட்டார் போக்குவரத்து திணைக்களம் போன்ற பிரதான அரசாங்க ஒழுங்கமைப்புகளால் வழங்கப்பட்ட ஐந்து மொபைல் பிரயோக விருத்தி மேல்மாகாணம் மற்றும் தென் மாகாணத்தில் வாகன வருமான அனுமதிப்பத்திர பிரயோக முகாமை, லங்காகேட் இடைபொருள் உட்கட்டமைப்பு முகாமை மற்றும் அரச மின்னஞ்சல், நாட்டின்கொண்டு செல்லல்,கொடுப்பனவு சேவை போன்றவாறான அதன் முக்கிய கூறுகளை முகாமை செய்தலும் • 20 தொடரிணைப்பு சேவைகளை வழங்குகின்ற 13 அரச ஒழுங்கமைப்புகளை தரம் உயர்த்துதல் மற்றும் மொபைல் முறைப்பாடுகளை செய்தலும் அரசாங்க உத்தியோகபூர்வ வெப் கொண்டுசெல்லலை அரசாங்ககொண்டு செல்லலுடன் ஒருங்கிணைத்தலும் லங்கா குளவுட் நிர்வாக ஆளணியினருக்கான கணனிகளும், | 100.00 | 47.10 |

**நெனசல நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி கருத்திட்டங்கள்**

| தொடர் இல | முன்மொழிவின் பெயர் | பௌதிக முன்னேற்றம் | மொத்த மதிப்பீட்டு செலவு (ரூபா மில்) | 31.12.2014 இல் செலவு |
|---|---|---|---|---|
| 13 | புதிய நெனசல நிலையங்களை நடைமுறைப்படுத்தல் | தேவையான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் மனித திறனுடன் 2 10 நெனசல நிலையங்களை நிர்மாணித்தல் | 225.00 | 172.40 |
| 14 | தற்போதுள்ள நெனசல நிலையத்தை புதுப்பித்தலும் தரம் உயர்த்தலும் | 100 நெனசல நிலையங்கள் புதிய உபகரணங்களுடன் நன்கு உபகரணமளிக்கப்பட்டுள்ளன அத்துடன் சிறந்த சேவைகளை வழங்குகின்றன.சில செயற்படாத, நிலையங்கள் மீளசெயற்பாட்டை ஆரம்பித்துள்ளன. | 50.00 | 58.92 |
| 15 | விழிப்புணர்வை வலுப்படுத்தலும் பயன்பாடும் | சமுதாயத்தில் நெனசல நிலையங்கள் மற்றும் அதன் சேவைகள் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்துள்ளன. | 22.00 | 22.00 |
| | **மொத்தம்** | | **542.54** | **370.58** |

# இ-அரசாங்க கொள்கையை நடைமுறைப்படுத்துதல்


## இற்றைவரைப்படுத்தப்பட்ட வெப் தளங்கள்




இலங்கை அரசாங்க வலையமைப்பு




லங்கா கேட் ( இலங்கை நுழைவாயில்





அரச நிறுவனங்களின் இணைய தளங்களை அபிவிருத்தி செய்தலும் நாளதுவரைப்படுத்தலும்




அரசாங்க தகவல் நிலையம்




மோட்டார் போக்குவரத்து திணைக்களம்




தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சு


උඩරට කිරුළ

# தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் கண்காட்சியும்

## நோக்கங்களும் குறிக்கோள்களும்

இந்நிகழ்வின் பிரதான நோக்கம் வருடாந்த தேசத்திற்கு மகுட நிகழ்ச்சித்திட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்தினதும் குடும்பங்கள், கிராமங்கள் மற்றும் பிரதேச செயலக பிரிவுகளை இலக்காககொண்டு இந்நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் ஆகும். இக்கருத்திட்டங்கள் அவர்களின் பொருளாதார, சமூக, ஆன்மீக மற்றும் நிர்வாக பிரச்சனை சார்பானவை.

**தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் கண்காட்சியும்- 2013**தேசத்திற்கு மகுடம் கண்காட்சி 2013இல் அம்பாறையில் நடைபெற்றது. நிர்மாணத்திற்கான மொத்த மதிப்பீட்டு செலவு 1.27 பில்லியன் இது இடைக்கால வரவு செலவு திட்ட வேலைச்சட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டது. கீழ்வரும் அட்டவணை நிர்மாணத்தின் முன்னேற்றத்தை காட்டுகின்றது .

| | கட்டிட பெயர் | TEC, மில் ரூபா | பூர்த்தி | அமைப்பாளர் |
|---|---|---|---|---|
| 1 | விடுதி | 235.9 | 2014 | அரச பொறியியல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் |
| 2 | ஜிம்னாசியம் | 188.1 | 2016 | |
| 3 | விடுதி | 113.1 | 2014 | அரச பொறியியல் கூட்டுத்தாபனம் |
| 4 | விரிவுரை மண்டபம்-ஏ | 377.5 | 2016 | |
| 5 | விரிவுரை மண்டபம்-பி | | 2016 | |
| 6 | விரிவுரை அறை ஏ | 159.7 | 2016 | |
| 7 | விரிவுரை அறை பி | | 2016 | |
| 8 | கேட்போர் கூடம் (புத்தாக்கம் மாத்திரம்) | 63.3 | நிர்மாணம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது | |
| 9 | வாசிப்பு மண்டபம் | 14.21 | 30.07.2014 ஆரம்பிக்கப்பட்டது | அலெஸீஸ் கன்ஸ்ட்ரக்ஷன் பிறைவேட் லிமிட்டெட்/ மாவட்ட செயலகம் அம்பாறை |
| 10 | சிற்றுண்டிச்சாலை | 15.05 | | அர்ஜுனா இன்ஜினியரிங் மாவட்ட செயலகம் அம்பாறை |
| 11 | வீடமைப்புதிட்டம் பொல்லேபட | 6.45 | | மாவட்ட செயலகம் அம்பாறை ,DSD-மகாஓயா |

## தேசத்திற்கு மகுடம் - 2014

அமைச்சின் பிரதான கடமை கண்காட்சியை ஒழுங்கமைத்தலாக இருந்ததுடன் தேசத்திற்கு மகுடம் 2014 இன் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தலாக இருந்தது.

அபிவிருத்தி கருத்திட்டங்கள் வடமேல் மாகாணத்தின் குருநாகல் புத்தளம் மாவட்டங்களிலும் சப்ரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

கண்காட்சியானது குருநாகல் மாவட்டத்தின் குளியாபிட்டிய பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

பின்வரும் அட்டவணை நிர்மாண முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

| | கட்டிட பெயர் | TEC, மில் ரூபா | 2014 இல் நடைபெற்றவை | அமைப்பாளர் |
|---|---|---|---|---|
| 01 | வயம்ப பல்கலைக்கழக கேட்போர்கூடம் | 250,000,000.00 | பூர்த்திசெய்து கையளிக்கப்பட்டது | அரச பொறியியல் கூட்டுத்தாபனம் |
| 02 | வயம்ப பல்கலைக்கழக நெனோ தொழில்நுட்ப ஆய்வுகூடம் | 30,000,000.00 | பூர்த்திசெய்து கையளிக்கப்பட்டது | அரச பொறியியல் கூட்டுத்தாபனம் |
| 03 | வயம்ப பல்கலைக்கழக மாணவர் நிலையம் | 70,000,000.00 | பூர்த்திசெய்து கையளிக்கப்பட்டது | இலங்கை கடற்படை |
| 04 | வயம்ப பல்கலைக்கழக ஜிம்னாசியம் | 250,000,000.00 | பூர்த்திசெய்து கையளிக்கப்பட்டது | அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபனம் |
| 05 | வயம்ப பல்கலைக்கழக நீர் வினியோக கருத்திட்டம் | 92,000,000.00 | பூர்த்திசெய்து கையளிக்கப்பட்டது | |
| 06 | வயம்ப பல்கலைக்கழக ஏரி அபிவிருத்தி | 5,000,000.00 | பூர்த்திசெய்து கையளிக்கப்பட்டது | |
| 07 | வயம்ப பல்கலைக்கழக வொலிபோல் மைதானம் | 20500000.00 | பூர்த்திசெய்து கையளிக்கப்பட்டது | |
| 08 | குளியாபிட்டிய மத்திய கல்லூரி இருமாடி நூல்நிலையம் | 17,000,000.00 | பூர்த்திசெய்து கையளிக்கப்பட்டது | வயம்ப பொறியியல் பிரிவு |
| 09 | குளியாபிட்டிய மத்திய கல்லூரி கேட்போர்கூடம் | 140,160,000.00 | பூர்த்திசெய்து கையளிக்கப்பட்டது | வயம்ப பொறியியல் பிரிவு |
| 10 | குளியாபிட்டிய தொழில்நுட்ப கல்லூரி நிர்வாகதொகுதி | 60,000,000.00 | பூர்த்திசெய்து கையளிக்கப்பட்டது | |
| 11 | குளியாபிட்டிய தொழில்நுட்ப கல்லூரி நீர் வினியோக கருத்திட்டம் | 98,000,000.00 | பூர்த்திசெய்து கையளிக்கப்பட்டது | |

# தேசத்திற்கு மகுடம் – 2015

தேசத்திற்கு மகுடம் 2015 தென்மாகாணத்தில் காலி,மாத்தறை ,அம்பாந்தோட்டை மாவட்டங்களையும் சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தை இலக்காகக்கொண்டு நடாத்தப்படுகின்றது.

தொலைத் தொடர்ப்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சானது தேசிய கண்காட்சியின் ஒருங்கிணைப்பிற்கும் நிர்மாணங்கள் தொடர்பாகவும் பொறுப்பு வாய்ந்ததாகும்.

தேசத்திற்கு மகுடம் 2015 மாத்தறை மாவட்டத்தின் இரு கண்காட்சி மைதானங்களில் நடைபெறவுள்ளது. அவையாவன கோதவில வத்த ,கம்புருகமுவ மற்றும் சரசவி பிளேஸ்

## கோதவில வத்த கண்காட்சி மைதான நிர்மாணிப்புகள்

| | அமைச்சு/ நிறுவகம் | முன்மொழியப்பட்ட கருத்திட்டம் | மொமசெ (TEC )ரூபா மில் | அமைப்பாளர் |
|---|---|---|---|---|
| 1 | **வைத்தியசாலை வளாகம்- சுகாதார அமைச்சு** | **6 வார்ட் மாடித்தொகுதி** | 179 | சிஇசிபி |
| | | 6 வார்ட் மாடித்தொகுதி | 179 | |
| | | மருத்துவதாதியர் வைத்தியசாலை காம்ப்ளெக்ஸ் | 89 | |
| | | இளநிலை மருத்துவர் விடுதி | 140 | |
| | | சாக்கடை வடிகால் | 80 | |
| | | விரிவுரை மண்டப காம்ப்ளெக்ஸ் / தாதியர் பாடசாலை | 60 | |
| | | நிர்வாக காம்ப்ளெக்ஸ் / தாதியர் பாடசாலை | 49 | |
| 2 | **சிறைச்சாலைகள் திணைக்களம்** | **ஆணையாளரின் அதிகாரபூர்வ இல்லம்** | 15 | **எஸ்இசி** |
| 3 | **நிதி அமைச்சு** | நீதிமன்ற கட்டிடதொகுதி | 50 | |
| 4 | **நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு** | கண்காட்சி மைதானத்திற்கு நீர் வழங்கல் | 150 | **என் டபிள்யுஎஸ்டிபி** |
| 5 | **சனாதிபதி அலுவலகம்/ மாவட்டசெயலகம், மாத்தறை** | மாவட்ட நிர்வாக கட்டிடதொகுதி/ 1stபகுதிt | 50 | **கடற்படை** |
| | | மாவட்ட நிர்வாக கட்டிடதொகுதி/ 2வதுபகுதி | 250 | **யுடிஏ** |
| 6 | **சுற்றாடல் மற்றும் மீள்சக்தி அமைச்சு** | விரய முகாமைத்துவம் | 40 | **பயோகிறீன் அமைச்சு** |
| 7 | **சுகாதார சேவைகள் திணைக்க்ளம்/ ன் மாகாணம்** | சுகாதார பயிற்சி நிலையம் | 43 | **மாகாண பொறியியல் திணைக்களம்.** |
| 8 | **மாகாண நீர் வழங்கல் அமைச்சு** | கனகதெனிய ஏரியினை புனரமைத்தல் | 4 | **மாகாண நீர் வழங்கல் அமைச்சு** |

## சரசவி பிளேஸ் கண்காட்சி மைதானம் நிர்மாணிப்பு

| | அமைச்சு/ நிறுவகம் | முன்மொழியப்பட்ட கருத்திட்டம் | TEC ரூபா மில் | அமைப்பாளர் |
|---|---|---|---|---|
| 1 | கல்வி அமைச்சு/ மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயம் | 3 மாடிவகுப்பறை கட்டிடம் (135 X 30) | 44 | சிஇசிபி |
| | | 400m ட்ரக் உடனான மைதானம் | 25 | |
| | | A ஆய்வுகூடம் மற்றும் நிர்வாக இடத்துடனான மூன்று மாடிக்கட்டிடம் | 38 | |

••கண்காட்சி மைதானத்திற்கு வெளியே மாத்தறை மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்

| | அமைச்சு/ நிறுவகம் | முன்மொழியப்பட்ட கருத்திட்டம் | மொமசெ (TEC) ரூபா மில் | அமைப்பாளர் |
|---|---|---|---|---|
| 1 | நீர் வழங்கல் அமைச்சு/தென் மாகாணம் | கமுனுருகமுவ ஏரியினை புனரமைத்தல் | 2 | நீர் வழங்கல் அமைச்சு/ தென் மாகாணம் |
| 2 | மாவட்டசெயலகம்/ மாத்தறை | நகர மண்டபம் நிர்மாணிப்பு/ மாத்தறை | 300 | யுடிஎ |
| 3 | | வாடிவீட்டினை புனமைத்தல்/ மாத்தறை | 8 | |
| 4 | | எம்ஆர்/சுஜாத் பாலிகா வித்தியாலயம் மலசலகூட அலகு நிர்மாணிப்பு | 3 | மாவட்டசெயலாளர்/ மாத்தறை |
| 5 | | பரம விசித்திர ராமய,தெவனுவரவில் சங்கவாச மற்றும் தான சால நிர்மாணிப்பு | 19 | மாவட்டசெயலாளர்/ மாத்தறை |
| 6 | | ஹக்மன தபால் நிலையத்திற்காக புதிய கட்டிட நிர்மாணிப்பு | 10 | மாவட்டசெயலாளர்/ மாத்தறை |
| 7 | | ஹக்மன DSD க்கான புதிய நிர்வாக கட்டிடதொகுதி நிர்மாணிப்பு | 20 | மாவட்டசெயலாளர்/ மாத்தறை |
| 8 | | வெஹரகென கோவில் அபிவிருத்தி | 10 | மாவட்டசெயலாளர்/ மாத்தறை |
| 9 | | வருகனல ஏரி புதுப்பித்தல் | 20 | மாவட்டசெயலாளர்/ மாத்தறைமாவட்டசெயலாளர்/மாத்தறை |
| 10 | கலாச்சார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு | மாத்தறையின் கலாச்சார உட்கட்டமைப்பினை விருத்தி செய்தல் | 40 | சிஇசிபி |

தேசத்திற்கு மகுடம் 2013 இன் கீழ் அம்பாறை ஹார்டி உயர் தொழில்நுட்ப கல்லூரி நிர்மாணிப்புகள்




விரிவுரை மண்டபம் ஏ & பி





கேட்போர்கூடம்



விடுதி



சிற்றுண்டிச்சாலை

# தொலைத் தொடர்புகள் திணைக்களம் (கலைப்பின் கீழ்)

# தொலைத் தொடர்புகள் திணைக்களம் (கலைப்பின் கீழ்)

## அறிமுகம்

1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி தனியான திணைக்களமாக தொலைத்தொடர்புகள் திணைக்களம் தாபிக்கப்பட்டது. தற்பொழுது இந்த நிறுவனத்தின் ஒழித்துக்கட்டல் நடவடிக்கைக்கு மேலதிகமாக பழைய ஊழியர்களின் தாபன விடயங்களை மேற்கொள்ளுகின்றது.

பழைய உழியர்களின் தாபன விடயங்களுடன் பொதுச் சேவைகளை மேற்கொள்கின்றது

பௌத்த அலுவல்களுக்கான ஆணையாளர் நாயகத்தினது சிபாரிசுகளுக்கு அமைய பௌத்த வழிபாட்டு ஸ்தலங்களுக்கும், கிறிஸ்தவ அலுவல்களுக்கான திணைக்களத்தினது சிபாரிசுகளுக்கு அமைய கிறிஸ்தவ சமய வழிபாட்டு ஸ்தலங்களுக்கும் புதிய தொலைபேசி இணைப்புகளையும் தற்பொழுது நிறுவப்பட்டிருக்கின்ற தொலைபேசி வசதிகளுக்கும் சலுகைக் கட்டணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.அந்தந்த அமைச்சுகளினதும் திணைக்களங்களினதும் சிபாரிசுகளுக்கு இணங்க 846/847ஆம் இலக்க நிதிப்பிரமாணக் குறிப்புகளுக்கு அமைய அலுவலகத் தொலைபேசி வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான தொலைபேசி வசதிகளைப்பெற்றுக் கொடுத்தல் மற்றும் உத்தியோகபூர்வ இல்லத் தொலைபேசிகளை தனிப்பட்ட தொலைபேசிகளாக மாற்றிக்கொடுத்தல் போன்ற விடயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

# நிதிசார் முன்னேற்றம்




# அமைச்சின் நிதிசார் முன்னேற்றம்

## அறிமுகம்

இந்த அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் முதலிய இரண்டு முக்கிய நிழ்ச்சித் திட்டங்களினூடாக நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2014ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் 185 ஆம் இலக்க செலவினத் தலைப்பின் கீழ் இந்த அமைச்சுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் என்பன பற்றிய விபரங்கள் கீழ்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| செலவுவகுதி | 2014 | |
|---|---|---|
| | ஒதுக்கப்பட்டநிதி (ரூ.மி.) | உண்மையான செலவு (ரூ.மி.) |
| மீண்டெழும்செலவு | 208.78 | 183.94 |
| மூலதனச்செலவு | 1,509.22 | 950.80 |
| **மொத்தம்** | **1,718.00** | **1134.74** |



**அமைச்சின் செலவினத்தலைப்பின் கீழ் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களின் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுகள் ஆகியன பற்றிய சுருக்கம்**

| விபரம் | வரவுசெலவு திட்டம் 2014 (ரூபா.) (திருத்தியது) | 2014 திசெம்பர் வரை மதிப்பீடு. (ரூபா.) |
|---|---|---|
| மீண்டெழும்செலவு | **208,783,730.00** | **183,935,919.00** |
| செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 99,983,730.00 | 92,766,713.52 |
| - அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 108,800,000.00 | 91,169,205.04 |
| மூலதனசெலவு | **1,509,216,270.00** | **950,808,361.00** |
| - செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 155,616,270.00 | 144,871,738.87 |
| - அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 1,353,600,000.00 | 805,936,622.53 |
| **மொத்த செலவு** | **1,718,000,000.00** | **1,134,744,279.96** |

## அமைச்சின் செலவினத்தலைப்பின் கீழ் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களின் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுகள் ஆகியன பற்றிய விபரம்

செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

கருத்திட்டம் 01 – அமைச்சு அலுவலகம்

| செலவினத் தலைப்பு | வகுதி/தலைப்பு/விடயம்/விபரிப்பு | வரவுசெலவுதிட்டம்2014 (ரூபா.) (திருத்தியது) | 2014 தசெம்பர் .வரைசெலவு (ரூபா.) |
|---|---|---|---|
| | **மீண்டெழும் செலவுகள்** | **42,696,800.00** | **36,450,945.87** |
| | **தனியாள் வேதனாதிகள்** | **13,850,075.00** | **12,463,964.77** |
| 1001 | சம்பளமும் வேதனமும் | 7,000,000.00 | 6,049,166.91 |
| 1002 | மேலதிகநேர மற்றும் விடுமுறைநாள் கொடுப்பனவுகள் | 2,000,000.00 | 1,564,729.05 |
| 1003 | ஏனைய கொடுப்பனவுகள் | 4,850,075.00 | 4,850,068.81 |
| | **பிரயாணச்செலவுகள்** | **3,225,000.00** | **3,041,444.50** |
| 1101 | உள்நாட்டுப் பிரயாணச்செலவு | 925,000.00 | 784,472.50 |
| 1102 | வெளிநாட்டுப் பிரயாணச்செலவு | 2,300,000.00 | 2,256,972.00 |
| | **வழங்கல்கள்** | **9,199,000.00** | **7,967,240.77** |
| 1201 | காகிதாதிகளும்அலுவலகத்தேவைப்பொருட்களும் | 500,000.00 | 495,315.44 |
| 1202 | எரிபொருள் | 8,600,000.00 | 7,372,329.33 |
| 1203 | உணவுபானங்கள் மற்றும் சீருடைகள் | 99,925.00 | 99,596.00 |
| | **பராமரிப்புச் செலவுகள்** | **4,575,000.00** | **2,728,627.72** |
| 1301 | வாகனம் | 4,375,000.00 | 2,563,080.67 |
| 1302 | இயந்திராதிகளும் உபகரணங்களும் | 200,000.00 | 165,547.05 |
| 1303 | கட்டிடங்களும் நிர்மாணங்களும் | 0.00 | 0.00 |
| | **சேவைகள்** | **11,846,800.00** | **10,249,668.11** |
| 1401 | போக்குவரத்து | 3,796,800.00 | 3,796,706.45 |
| 1402 | தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் | 1,400,000.00 | 1,128,386.58 |
| 1403 | மின்சாரம் மற்றும் த ண்ணீர்கட்டணங்கள் | 3,150,000.00 | 2,400,529.69 |
| 1405 | ஏனையவை | 3,500,000.00 | 2,924,045.39 |
| | **மூலதனச் செலவுகள்** | **18,250,000.00** | **11,965,174.83** |
| | **மூலதனவொத்துக்களின் புனர்நிர்மாணங்களும் மேம்பாடுகளும்** | **13,550,000.00** | **10,059,289.57** |
| 2001 | கட்டிடங்களும் நிர்மாணங்களும் | 5,150,000.00 | 3,748,699.07 |
| 2002 | இயந்திராதிகளும் உபகரணங்களும் | 400,000.00 | 277,063.04 |
| 2003 | வாகனம் | 8,000,000.00 | 6,033,527.46 |
| | **மூலதனச்சொத்துக்களின் கொள்வனவு** | **4,700,000.00** | **1,905,885.26** |
| 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 2,550,000.00 | 1,034,590.26 |
| 2103 | இயந்திராதிகளும் உபகரணங்களும் | 2,150,000.00 | 871,295.00 |
| | மொத்த செலவு | **60,946,800.00** | **48,416,120.70** |

**செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**

**கருத்திட்டம் 02 - நிருவாக மற்றும் தாபன சார் சேவைகள்**

| செலவினத் தலைப்பு | வகுதி/தலைப்பு/விடயம்/விபரிப்பு | 201 4 வரவுசெலவுதிட்டம்4 (ரூபா.) (திருத்தியது) | 2014 திசெம்பர். வரைசெலவு (ரூபா.) |
|---|---|---|---|
| | **மீண்டெழும்செலவுகள்** | **57,181,680.00** | **56,315,767.65** |
| | **தனியாள் வேதனாதிகள்** | **21,426,380.00** | **21,352,918.37** |
| 1001 | சம்பளமும்வேதனமும் | 12,000,000.00 | 11,931,961.64 |
| 1002 | மேலதிகநேர மற்றும் விடுமுறைநாள் கொடுப்பனவுகள் | 1,105,250.00 | 1,105,231.04 |
| 1003 | ஏனைய கொடுப்பனவுகள் | 8,321,130.00 | 8,315,725.69 |
| | **பிரயாணச்செலவுகள்** | **1,708,127.00** | **1,672,812.50** |
| 1101 | உள்நாட்டுப் பிரயாணச்செலவு | 173620.00 | 154,302.00 |
| 1102 | வெளிநாட்டுப் பிரயாணச்செலவு | 1,534,507.00 | 1,518,510.50 |
| | **வழங்கல்கள்** | **4,681,500.00** | **4,666,649.06** |
| 1201 | காகிதாதிகளும் அலுவலகத் தேவைப்பொருட்களும் | 895,000.00 | 894,724.06 |
| 1202 | எரிபொருள் | 3,500,000.00 | 3,492,442.00 |
| 1203 | உணவு மற்றும் சீருடைகள் | 286,500.00 | 279,483.00 |
| | **பராமரிப்புச்செலவுகள்** | **2,643,500.00** | **2,643,450.65** |
| 1301 | வாகனம் | 2,286,800.00 | 2,286,783.93 |
| 1302 | இயந்திராதிகளும் உபகரணங்களும் | 356700.00 | 356,666.72 |
| | **சேவைகள்** | **26,327,423.00** | **25,743,141.32** |
| 1401 | போக்குவரத்து | 56,200.00 | 56,035.50 |
| 1402 | தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் | 1,588,450.00 | 1,588,420.73 |
| 1403 | மின்சார மற்றும் தண்ணீர் கட்டணங்கள் | 4,445,280.00 | 3,861,868.88 |
| 1404 | வாடகையும் வரியும் | 17,473,493.00 | 17,473,344.00 |
| 1405 | ஏனையவை | 2,764,000.00 | 2,763,472.21 |
| | **இடமாற்றங்கள்** | **500,000.00** | **236,795.75** |
| 1506 | பொதுச் சேவையாளர்களுக்கான ஆதன கடன் | 500,000.00 | 236,795.75 |
| | **மூலதனச்செலவுகள்** | **137,366,270.00** | **132,906,564.04** |
| | **புனர்நிர்மாணங்களும் மேம்பாடுகளும்** | **3,616,270.00** | **2,884,557.41** |
| 2001 | கட்டிடங்களும் நிர்மாணங்களும் | 500,000.00 | 500,000.00 |
| 2002 | இயந்திராதிகளும்உபகரணங்களும் | 516,270.00 | 516,261.97 |
| 2003 | **வாகனங்கள்** | 2,600,000.00 | 1,868,295.44 |
| | **மூலதனச்சொத்துக்களின் கொள்வனவு** | **2,950,000.00** | **2,464,876.64** |
| 2101 | வாகனங்கள் | 200,000.00 | 200,000.00 |
| 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 1,000,000.00 | 639,285.64 |
| 2103 | பொறி இயந்திராதிகளும் உபகரணங்களும் | 1,650,000.00 | 1,625,591.00 |
| 2104 | கட்டிடங்களும் நிர்மாணங்களும் | 100,000.00 | 0.00 |
| | தேசத்திற்கு மகுடம் | **130,000,000.00** | **127,075,000.00** |
| 1-2-2 | கட்டிடங்கள் (தேசத்திற்குமகுடம் அம்பாறை) | 130,000,000.00 | 127,075,000.00 |
| | **மனித வள விருத்தி** | **800,000.00** | **482,129.99** |
| 2401 | ஊழியர்களுக்கு பயிற்சியளித்தல் | 800,000.00 | 482,129.99 |
| | **மொத்தச் செலவு** | **194,653,200.00** | **189,222,331.69** |

## அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

## கருத்திட்டம் 03 – தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி

| செலவினத் தலைப்பு | வகுதி/தலைப்பு/ விடயம்/ விபரிப்பு | வரவுசெலவு திட்டம் 2014 (ரூபா.) (திருத்தியது) | 2014 திசெம்பர். வரைசெலவு (ரூபா.) |
|---|---|---|---|
| | **மீண்டெழும் செலவுகள்** | **108,800,000.00** | **91,169,205.04** |
| 185-2-3-2-1405 | ஏனையவை – தகவல் தொழில்நுட்பப்பேட்டை(மாவட்ட ஐரி நிலையம்)- யாழ்ப்பாணம் | 5,000,000.00 | 4,519,580.55 |
| 185-2-3-3-1405 | ஏனையவை – தகவல் தொழில்நுட்பப் பேட்டை(மாவட்ட ஐரி நிலையம்)- மன்னார் | 4,000,000.00 | 2,964,999.96 |
| 185-2-3-4-1405 | ஏனையவை – தேசத்திற்கு மகுடம் | 99,800,000.00 | 83,684,624.53 |
| | **மூலதனச் செலவுகள்** | **1,353,600,000.00** | **805,936,622.53** |
| 185-2-3-1-2502 | முதலீடு- பாடசாலைக் கணனி ஆய்வுகூடநிர்மாணம் ( இநெனபியச) | 700,000,000.00 | 510,169,034.68 |
| 185-2-3-2-2502 | முதலீடு – தகவல் தொழில்நுட்பப்பேட்டை (மாவட்ட ஐரி நிலையம்)-யாழ்ப்பாணம் | 2,500,000.00 | 1,624,815.50 |
| 185-2-3-3-2502 | முதலீடு – தகவல் தொழில்நுட்பப்பேட்டை (மாவட்ட ஐரி நிலையம்)- மன்னார் | 1,100,000.00 | 1,098,306.87 |
| 185-2-3-6-2502 | தகவல் தொடர்பாடல் முகவர் நிலையம் (ICTA) நெனசல 2013 | 100,000,000.00 | 100,000,000.00 |
| 185-2-3-7-2502 | தகவல் தொடர்பாடல் முகவர் நிலையம் (ICTA) நெனசல 2014 | 550,000,000.00 | 193,044,465.48 |
| | **மொத்தம்** | **1,462,400,000.00** | **897,105,827.57** |

විදුලි සංදේශ හා තොරතුරු තාක්ෂණ අමාත්‍යාංශය
අංක. 79/1, 5 වන පටුමඟ,
කොළඹ - 03,
දුරකතන: 011-2577777

தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சு
இல. 79/1, 5 வது ஒழுங்கை,
கொழும்பு - 03,
தொலைபேசி: 011-2577777

Ministry of Telecommunication and Information Technology
No. 79/1, 5th Lane,
Colombo - 03,
Telephone: 011-2577777